DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

# C.M.P. No.702/2024

Sworn Statement : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | பிரபு | Taluk | உளுந்தூர்பேட்டை |
| Father's Name | நாராயணசாமி | Village | கீழ்க்குப்பம் |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **12.02.2024.** | | | |

(Complainant present)

**முதல் விசாரணை :**

1. நான் கீழ்குப்பம் கிராமத்தில் வசித்து வருகிறேன். செங்கல் சூலையில் வேலை செய்து தட்டாம்பாளையத்தில் உள்ள உறவினாரான வீரராசு, அவரது மகன்கள், விக்னேஷ், விஜி ஆகியோர்களது வீட்டில் எனது டிராக்டரை நிறுத்திவிட்டு எனது ஊருக்கு திரும்பிவிட்டேன். பின்னர் 11.06.2022 அன்று டிராக்டரை காணவில்லை என்று மேற்சொன்ன எனது உறவினர்கள் எனக்கு தகவல் சொன்னார்கள். நான் வாகனத்தை பைபான்சில் வாங்கியுள்ளதால் இரண்டு நபர்கள் எடுத்து சென்றுவிட்டதாக விஜி சொன்னார்.

2. நான் பண்ருட்டி காவல் நிலையம் சென்று கேட்டபோது மேற்படி விஜி தனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னார். பின்னர் நவம்பர் மாதம் 20ம் தேதி டிராக்டருடன் இருந்த டிப்பரையும் எடுத்து சென்றுவிட்டதாக மேற்சொன்ன உறவினர்கள் சொன்னார்கள். நான் மேற்சொன்ன உறவினர்களை அழைத்து கொண்டு பண்ருட்டி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு திரும்பி சென்றுவிட்டேன். 20 நாட்கள் கழித்து மீண்டும் வந்து காவல் நிலையத்தில் கேட்டபோது என்னை யாரு என்று தெரியாது என்றும் நான் வாகனத்தை ரோட்டில் நிறுத்திவிட்டு சென்றுவிட்டதாக மேற்சொன்ன வீரராசு மற்றும் அவரது மகன்கள் போலிசாரிடம் சொன்னார்கள்.

3. நான் அவசர வேலையாக செங்கல் சூலைக்கு சென்றுவிட்டேன். அதனால் என்னால் உடனடியாக காவல் நிலையம் செல்ல முடியவில்லை. பின்னர் நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். புகாரின் மீது சி.எஸ்.ஆர் வாங்கினார்கள். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யுமாறு கேட்டபோது மேற்சொன்ன நபர்களின் பேரை நீக்கிவிட்டு

சந்தேகமாக உள்ளது என புகாரை திருத்தி எழுதி கொடுத்தால் மட்டும் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யமுடியும் என்று சொன்னார்கள். அதனைபின்னிட்டு நான் முடியாது என்று சொல்லிவிட்டு வந்துவிட்டோம். அதனைபின்னிட்டு காவல் நிலையம் செல்லவில்லை. அதனால் இந்த புகாரை தாக்கல் செய்கிறேன்.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

C.M.P. No.702/2024

Sworn Statement : PW2

| | | | |
|---|---|---|---|
| Name | வெங்கடேசன் | Taluk | |
| Father's Name | கோவிந்தன் | Village | சிவலிங்கபுரம் |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **12.02.2024.** | | | |

**முதல் விசாரணை :**

நான் சிவலிங்கபுரத்தில் வசித்து வருகிறேன். கடந்த வருடம் தீபாவளி மாதம் அன்று பிரபு தனது டிராக்டர் தட்டாம்பாளையத்தில் தொலைந்து போனதாகவும், அதை பார்த்து வரலாம் என்று சொல்லி எனன்னை அழைத்து வந்தார். எனக்கு வேலை இருக்கிறது என்னால் வரமுடியாது என்று சொன்னேன். எனக்கு இதை தவிர வேறு எதுவும் தெரியாது.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

C.M.P. No.702/2024

Sworn Statement : PW3

| Name | வெங்கடகிருஷ்ணன் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | தேவராஜ் | Village | பிள்ளையார்குப்பம் |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **12.02.2024.** | | | |

**முதல் விசாரணை** :

1. நான் பிள்ளையார்குப்பத்தில் வசித்து வருகிறேன். எனது பெயரில் டிராக்டர் எடுத்து வைத்திருந்தார்கள். அதை எனது மாமா பிரபு அவரது சித்தப்பா வீட்டில் நிறுத்தி வைத்திருந்தார். 06.11.2022 அன்று டிராக்டர் காணாமல் போனதாக எனக்கு போன் வந்தது. வாகனத்தை பைனான்சில் வாங்கியதால் பைனான்ஸ்காரர்களிடம் கேட்டபோது பைனான்ஸ்காரர்கள் எடுக்கவில்லை என்று சொன்னார்கள்.

2. பின்னர் 15 நாட்கள் கழித்து மீண்டும் ஒரு போன் வந்தது. டிப்பரை காணவில்லை என்றும் சொன்னார்கள். அதனைபின்னிட்டு நாங்கள் வீரராசு வீட்டிற்கு சொன்றோம். அவர்கள் இரண்டு நபர்கள் எடுத்து சென்றதாக சொன்னார்கள். நாங்கள் அவரை அழைத்து கொண்டு புகார் கொடுப்பதற்காக காவல் நிலையம் வந்தோம். காவல் நிலையத்தில் வைத்து அவர்கள் யார் எடுத்து சென்றார்கள் என்று தெரியவில்லை என்று சொன்னார்கள். வீரராசு, விக்னேஷ், விஜி ஆகியோர்கள் 3 பேரும் அவர்கள் வீட்டில் தொலைந்து போனதால் அவர்கள் பேரில் புகார் கொடுத்தார்கள். காவல் நிலையத்தில் எங்களை அலைக்கடித்தார்கள்.

3. அதனைப்பின்னிட்டு வீரராசு வீட்டிற்கு சென்று கேட்டபோது அவர்கள் எங்களிடம் பிரச்சனை செய்தார்கள். அவர்கள் வாகனத்தை அவர்கள் வீட்டில் நிறுத்தவில்லை என்றும், இன்னொரு முறை அங்கு சென்றால் கொலை செய்துவிடுவதாக மிரட்டினார்கள். அதனைப்பின்னிட்டு காவல்நிலையம் சென்று மேற்படி நபர்கள் மீது புகார் கொடுத்தோம். ஆனால் போலிசார் புகாரை எடுக்கவில்லை. அதனைப்பின்னிட்டு பிரபு செங்கல் சூலையில் வேலை செய்வதால் காவல் நிலையம் செல்லவில்லை.

4. அதனைப்பின்னிட்டு மீண்டும் காவல் நிலையம் சென்று அவர்கள் மீது புகார் கொடுத்தோம். அப்போது போலிசார் மேற்படி நபர்கள் பேரை நீக்கிவிட்டு சந்தேகமாக உள்ளது என புகார் கொடுக்க சொன்னார்கள். நாங்கள் புகார் கொடுக்க மறுத்துவிட்டோம்.

அவர்கள் தான் வாகனத்தை எடுத்து வைத்துள்ளார்கள். அதனால் பிரபு இந்த தனிநபர் புகாரை தாக்கல் செய்துள்ளார்.